**கடற்றொழில் வெகுமதி நிதியம் - 2025**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடற்றொழில் வெகுமதி நிதியத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1996 இன் 2 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீர்வள சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிதியத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது. மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரிசோதனை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டது. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கை மீது கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன், அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாவிடின் எனது

அபிப்பிராயம் மாற்றியமைக்கப்பட வேண்டிடும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்பட்டிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2025 திசெம்பர் 31 இல வெகுமதி பெறுவோருக்கும் அரசின் பங்களிப்பாக செலுத்த வேண்டிய பெறுமதி காசேட்டின் படி ரூபா 14,766,706 ஆக இருந்த போதும் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 10,171,913 ஆக இருந்த காரணத்தினால் ரூபா 4,594,793 ஆன இணக்கமின்மையொன்று காணப்பட்டது. அவ் வேறுபாட்டில் காணப்பட்ட இனங்காணப்படாத மீதிகள் மற்றும் அரசிறையை இனங்கண்டு தீர்வு செய்வதற்கும் கணக்கீடு செய்வதற்கும் மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2025 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 2,449,081 | ரூபா 4,594,793 ஆன திட்டவட்டமாக இனங்காணப்படாத மீதி 2021 ஆம் ஆண்டுக்கு முன்னைய ஆண்டுகளின் கடற்றொழில் வெகுமதி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ள தொகைகளில் ஒவ்வொரு சட்ட தலைப்புக்களுக்குரியதாக உத்தியோகத்தர்களுக்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவு மீதிகளை திட்டவட்டமாக இனங்காண்பதற்கு முடியாதிருந்தமை மற்றும் அரசின் வருமானத்திற்கு செலவு வைக்க வேண்டிய மீதிகளை சரியாக இனங்காண்பதற்கு முடியாமை போன்ற விடயங்களின் பேரில் காணப்படுவதுடன் இம் மீதியை தீர்வு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. | ஒவ்வொரு சட்ட தலைப்புகளுக்கு உரியதாக உத்தியோகத்தர்களுக்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவு மீதிகள் மற்றும் அரசின் வருமானத்திற்காக செலவு வைக்க வேண்டிய மீதிகள் சரியாக இணங்காணப்பட்டு தீர்வு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை அரசின் பங்களிப்பு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரிய அரசின் வருமானத்திற்கு செலவு வைக்காமல் அரசின் இறையும் நிதி நிலைமை கூற்றில் பொறுப்பொன்றாக இனங்காணப்பட்டு கணக்கு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டிற்குரிய உத்தியோகத்தர்களுக்கு வெகுமதி கொடுப்பனவிற்காக நீதிமன்றங்களில் இருந்து கடற்றொழில் வெகுமதி நிதியத்திற்கு கிடைத்திருந்த போதும் கொடுப்பனவு செய்யப்படாதிருந்த ரூபா 423,612 தொகை கொடுப்பனவு செய்ய வேண்டிய வெகுமதி படிகள் கணக்கு மற்றும் திரட்டிய வெகுமதி நிதிய கணக்கு என்பவற்றுக்கு இடையே உரிய இணக்கமொன்று மேற்கொள்ளாமை காரணமாக திரட்டிய வெகுமதி நிதிய கணக்கு ரூபா 423,612 ஆம் மிகை கணிப்பீடாக மற்றும் செலுத்த வேண்டிய வெகுமதி படிகள் கணக்குகளில் அப் பெறுமானத்தால் குறைந்து இருந்தது. | 2019 சனவரி 01 இல் உள்ளவாறு கடற்றொழில் வெகுமதி நிதியத்தின் உத்தியோகத்தர்களுக்கு செலுத்த வேண்டிய படிகள் கணக்கில் முன்கொண்டு வந்த மீதிக்கும் 3,409 ஆகும். அதன் பிரகாரம் 2015 ஆம் ஆண்டிற்குரிய கிடைத்திருந்த ரூபா 344,660 தொகை உத்தியோகத்தர்களுக்கு செலுத்த வேண்டிய படிகள் கணக்கில் அவ்வாண்டின் போது பதிவு செய்யப்படாதிருந்தால் மற்றும் இது சீராக்க கூடிய போது பொருத்தமான கணக்கொன்று இல்லாதிருந்தமையால் அத் தொகை கடற்றொழில் வெகுமதி நிதியக் கணக்கிற்கு இணக்கம் செய்யப்பட்டது. | குறித்த கணக்குகளுக்கு இடையே சரியாக சீராக்கம் மேற்கொண்டு நிதிக் கூற்றுக்களில் சரியான மீதிகளை காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1996 இன் 02 (அ) ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீர்வளச் சட்டத்தின் 59(2) பிரிவு | வெகுமதி நிதிய நிர்வாகம் தொடர்பாக பணிப்பாளர் நாயகம் பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும் 2018 ஆண்டு முதல் 2025 ஆண்டு வரை கடற்றொழில் மற்றும் நீர்வளத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டங்களின் வெகுமதி நிதியத்தின் நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளை | சுற்றிவளைப்புக்கள் மற்றும் ஆய்வுகளின் போது கண்டறியப்பட்ட குற்றங்கள் தொடர்பாக வழக்குகள் பதிவு மேற்கொள்ளப்படுகின்றன. அத்தகைய வழக்குகளில், குற்றம் சாட்டப்பட்டவர்கள் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்ட பிறகு அபராதம் விதிக்கப்பட்டாலும், அந்த அபராதத் தொகை கடற்றொழில் வெகுமதி நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதில்லை. சில | நிதியத்தின் நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளை அடிப்படையாக கொண்டு அவற்றை ஆக்க பூர்வமாக நிறை வேற்றுவதற்காக திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இனங்கண்டு அவற்றை ஆக்கபூர்வமாக நிறை வேற்றுவதற்காக தேவையான ஆக்கக்கூறுகள் மற்றும் இலக்குகள் உள்ளடக்கப்பட்ட திட்டங்கள் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | வழக்குகளில் மட்டுமே, நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் மீன்களை ஏல விற்பனை செய்வதன் மூலம் பெறப்பட்ட பணம் கடற்றொழில் வெகுமதி நிதியத்திற்கு செலவு வைக்கப்படுகின்றது. வைக்கப்படுகிறது. எனவே, இந்த வழக்குகளில் கடற்றொழில் வெகுமதி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட பணத்தின் அளவு குறித்து முன்கூட்டியே எந்த முடிவுகளையும் எடுப்பது கடினமாகும். | |
| (ஆ) | 2025 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய வெகுமதித் தொகையாக ரூபா 10,171,913 தொகை நிதி நிலைமை கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 4,225,976 தொகை மீளாய் வாண்டிற்குரியதாகவும் ரூபா 5,945,937 தொகை 2014 ஆம் ஆண்டு முதல் இருந்து வரும் மீதியொன்றாகவும் மேலும் 2025 ஆண்டின் போது தாக்கல் செய்யப்பட்டிருந்த 713 வழக்குகளில் 06 வழக்குகளுக்குரிய ரூபா 345,635 தொகை நிதியத்திற்கு கிடைத்திருந்த போதும் அச் சுற்றி வளைப்புக்களில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்கு எவ்வித வெகுமதி தொகையும் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் உத்தியோகத்தர்களுக்கு வெகுமதி வெகுமதித் தொகையை வழங்குவதற்காக துரித நடைமுறையொன்று தயாரிக்காமை காரணமாக சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை சுற்றி | 2025 ஆம் ஆண்டிற்கு 713 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், 48 வழக்குகளுக்கு மட்டுமே ஏல வருமானம் செலவு வைக்கப்பட்டது. மாவட்ட கடற்றொழில் அலுவலகங்களால் ஒதுக்கப்பட்ட வழக்குகள் முடிவடையும் நேரத்தில் அரசுடமையாக்கப்பட்ட வைப்புத் தொகையை ஒரு மாதத்திற்குள் கடற்றொழில் வெகுமதி நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டும் என்றும், சுற்றிவளைப்புக்களில் பங்கேற்ற உத்தியோகத்தர்களின் பெயர்களை அப்போது பெற்றுக் கொள்ளுமாறு 2024 ஜூலை 19 திகதிய DFAR/INV/2024/01 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கை மூலம் அனைத்து மாவட்ட உதவி பணிப்பாளர்களுக்கும் முறையாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சோதனைகளுக்குப் பங்களிக்கும் பிற நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு, வெகுமதிகள் பெறப்பட்டது குறித்து DFAR/INV/08/RF/2025 என்ற கடிதம் மற்றும் 02 ஜூலை 2025 தேதியிட்ட கடிதம் மூலம் | உத்தியோகத்தர்களுக்கு வெகுமதி நிதியம் வழங்குவதற்காக விரைவான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை சுற்றி வளைப்பிற்காக உத்தியோகத்தர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | வளைப்பதற்காக உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்பொன்று மேற்கொள்ளப்படவில்லை யேஎன்பது அவதானிக்கப்பட்டது. | முறையாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,449,081 ஆன மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 142,948 தொகையாக காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 2,306,133 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. அந்த அதிகரிப்பிற்கு அரசுடைமையாக்கப்பட்ட பண்டங்களின் விற்பனை மூலம் கிடைத்த வருமானம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2026 ஏப்ரல் 06 ஆந் திகதி கணக்காய்விக்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், சட்ட விரோத மீன்பிடி தொடர்பாக 2025 ஆம் ஆண்டிற்காக 08 மாவட்ட கடற்றொழில் அலுவலகங்களால் திட்டமிடப்பட்ட 320 என்ற வருடாந்த சுற்றி வளைப்புக்கள் மற்றும் கைதுகள் என்ற இலக்குகளில் 169 இலக்குகள் மட்டுமே எட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் மாவட்ட அலுவலகங்களைப் பொறுத்து இலக்குகளை அடையாததன் சதவீதம், சம்பந்தப்பட்ட 23 சதவீதம் முதல் 95 சதவீதம் வரை இருந்ததுடன், திட்டமிடப்பட்ட இலக்குகளுக்கும் உண்மையான செயலாற்றபாட்டிற்கும் இடையே ஒரு குறிப்பிடத்தக்க இடைவெளி இருப்பதும் அவதானிக்கப்பட்டது. | பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை, உத்தியோகத்தர்கள் வெளிநாடு செல்வது, புதிய உத்தியோபகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்யாமை, சுற்றி வளைப்புக்களை நடத்துவதற்கு போதுமான உத்தியோகத்தர்கள் இல்லாததால் இலக்குகளை அடைய இயலாமை, மற்றும் கடற்றொழில் வெகுமதி நிதியத்திற்குரிய கொடுப்பனவுகளுக்காக போதியளவு தகவல்கள் இல்லாதது போன்ற காரணங்களால் இந்த சதவீதங்களில் வேறுபாடுகள் இடம்பெற்றுள்ளன. | மனிதவளத் தேவைகளைக் கண்டறிந்து அவற்றை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் மாவட்ட கடற்றொழில் அலுவலக மட்டத்தில சுற்றி வளைப்புக்கள் மற்றும் கைதுகள் தொடர்பான இலக்குகளின் முன்னேற்றம் உரிய நேரத்தில் மீளாய்வு செய்யப்பட்டு இலக்குகளை அடையத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2025 ஜனவரி 01 இல் உள்ளவாறு பறிமுதல் செய்யப்பட்ட மீன்களின் விற்பனையிலிருந்து பெற வேண்டிய ரூபா. 1,984,300 வருமான மீதியில் மீளாய்வாண்டில் எந்தத் தொகையும் அறவிடப்படாதிருந்ததுடன் அந் நிலுவை வருமான மீதிகள் நீதிமன்றங்களால் | 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றங்களிலிருந்து பெறப்பட வேண்டிய பறிமுதல் செய்யப்பட்ட மீன் விற்பனையின் நிலுவைகளை | நீதிமன்றங்களிலிருந்து பெறப்பட வேண்டிய நிலுவையில் உள்ள வருமான மீதிகளை உடனடியாக உறுதிப்படுத்தி அறவிடுவதற்குத் |

| | | |
|---|---|---|
| தொடர்புடைய உறுதிப்படுத்தும் செயல்முறையும் மெதுவாகவே இருந்தது. | உறுதிப்படுத்து வதற்காக அனைத்து உதவி பணிப்பாளர்களுக்கும் கடிதங்கள் மூலமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.2 ஏனைய விடயம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சட்டவிரோதமாக கடற்றொழில் அலுவல்கள் நடைபெறும் போது கடற்படையினால் கைது செய்யும் சந்தர்ப்பங்களும், துப்புக்கள் கிடைத்தலூடாக செயற்பாடுகள் மேற்கொள்கின்ற உத்தியோகத்தர்களும், மாவட்ட கடற்றொழில் அலுவலகங்களில் தேடுதல் செயற்பாடுகள் மேற்கொள்ளும் உத்தியோகத்தர்களையும் இனங்காணக்கூடியவாறு ஆவணப்படுத்தப்பட்டு விரைவாக கொடுப்பனவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு ஆவணப்படுத்தல் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், இந்த வெகுமதிகள் தொடர்பாக பொதுமக்களை அறிவுறுத்தி சட்டவிரோதமான செயற்பாடுகளின் சுற்றி வளைப்புக்களை அதிகரித்துக் கொள்வதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், 1996 இன் 02 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீர்வள சட்டத்தின் பிரிவு 59(1) இன் கீழ் இந்த நிதியம் ஆரம்பிக்கப்பட்டது சட்ட விரோதமான கடற்றொழில் அலுவல்களை சுற்றிவலைப்புக்காக உத்தியோகத்தர்களை ஊக்குவிக்கும் குறிக்கோளுடனாக காணப்பட்ட போதிலும், அந்த நோக்கங்களை செயற்திறனான நிறைவேற்றப்படும் வகையில் விதத்தில் வெகுமதிக் கொடுப்பனவு மற்றும் தகவல்கள் பெற்றுக்கொள்ளும் நடைமுறையும் செயற்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.. | சுற்றிவளைப்புக்களில் பங்குபற்றிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஒற்றர்களை இனங்காண்பதற்காக பதிவேடொன்றை சரியாக பராமரித்து செல்லுமாறும் தேவைப் பட்டியலில் கையொப்பத்தை பெறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஒற்றர்களை இனங்காண்பதற்காக மற்றும் துப்பு வழங்குவதற்காக மாவட்ட உதவிப் பணிப்பாளர்களுக்கு அல்லது கடற்றொழில் மற்றும் நீர்வளத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு நேரடியாக தகவல்கள் வழங்குவதற்காக முடியுமாக உள்ளதுடன் அது தொடர்பாக அனைத்து மாவட்ட அலுவலகங்கள் ஊடாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. | நிதியம் நிறுவப்பட்ட நோக்கமான சட்டவிரோத கடற்றொழில் அலுவல்களை சுற்றிவளைப்பிற்காக உத்தியோகத்தர்களையும் ஒற்றர்களையும் ஊக்குவிப்பிதை ஆக்கபூர்மாக நிறைவேற்றும் வகையில் தகவல்களை ஆவணப்படுத்துதல் மற்றும் வெகுமதி கொடுப்பனவு நடைமுறை முறைப்படுத்தப்பட வேண்டியதுடன் வெகுமதி முறைமை தொடர்பாக பொது மக்களுக்கு அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |